## சுருக்கம்

கூட்டுறவுத் துறை – அறிவிப்புகள் 2019–2020 – மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் வெளியிட்ட அறிவிப்புகள் – திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு அச்சகத்தின் அலுவலகக் கட்டடத்தினை ரூ.50.00 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்ய அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் (சிபி2) துறை

அரசாணை (நிலை) எண்.126

நாள்: 13.12.2021
ஸ்ரீபிலவ ஆண்டு, கார்த்திகை–27
திருவள்ளுவர் ஆண்டு–2052

படிக்க:

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க. எண் 30668/2019/ கிக3, நாள் 21.03.2020 மற்றும் 05.05.2021.

**ஆணை:–**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 03.07.2019 அன்று நடைப்பெற்ற கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் 2019–2020–ஆம் ஆண்டு மானிய கோரிக்கை விவாதத்தின் போது முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு

> "நாமக்கல் மற்றும் திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு அச்சகங்களில், நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகத்தில் முதல் தளம் ரூ. 31.00 இலட்சம் மதிப்பிலும், திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் ரூ. 67.00 இலட்சம் மதிப்பிலும் கட்டப்படும்."

2. பார்வையில் காணும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதத்தில், முன்னாள் கூட்டுறவுத் துறை அமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக முறையே ரூ.31.00 இலட்சம் மற்றும் ரூ.67.00 இலட்சம் ஆக மொத்தம் ரூ.98.00 இலட்சத்தினை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால்

பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து பெற்று திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக உள்ளூர் திட்ட குழுமத்திடம் நாமக்கல் மற்றும் திருநெல்வேலி மண்டல இணைப்பதிவாளர் அனுமதி வேண்டி விண்ணப்பித்த நிலையில், உள்ளூர் திட்ட குழும உதவி இயக்குநர் அவர்கள் எந்த வகை தொழிற்முறை கட்டடமாக இருந்தாலும் இரயில்வே தண்டவாளத்திலிருந்து சுமார் 100 அடிக்கு அப்பால் கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும், 100 அடிக்கு உள்ளாக கட்டடங்கள் கட்டும்போது இரயில்வே துறையிடம் தடையின்மை சான்று பெற்று வழங்கினால் மட்டுமே அனுமதி வழங்கப்படும் என்றும் ஆனால் உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டடம் இரயில்வே தண்டவாளத்திலிருந்து சுமார் 20 அடி தூரத்தில் அமைந்திருப்பதால் தெற்கு இரயில்வே மண்டல அலுவலகமான மதுரை அலுவலகத்திற்கு நேரடியாக சென்று விண்ணப்பித்த போது நிபந்தனைகளுடன் கூடிய அனுமதி மட்டுமே வழங்கப்படும் என மதுரை மண்டல இரயில்வே அலுவலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

3. இந்நிலையில், திருநெல்வேலி மத்தியக் கூட்டுறவு வங்கியின் காலி இடத்தை மேற்படி அச்சகத்திற்கு கிரையம் மூலம் கொள்முதல் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது என்றும், ஆனால், திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகத்தில் போதுமான நிதிநிலை இல்லாததைக் கருத்திற்கொண்டு அம்முயற்சிகள் கைவிடப்பட்டதாகவும், இந்நிலையில் முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக ஏற்கெனவே அச்சகத்திற்கு சொந்தமாக உள்ள பழைய கட்டடத்தை புனரமைப்பதற்கு காணிக்குடியிருப்பு மலைவாழ் மக்கள் தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கத்திடமிருந்து ரூ.50.00 இலட்சத்திற்கான உத்தேச மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றும் தெரிவித்து "புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல்" என்பதற்கு பதிலாக "திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு சொந்தமான பழைய கட்டடத்தை ரூ.50.00 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்யப்படும்" என்று திருந்திய அறிவிப்பிற்குரிய ஆணை வழங்குமாறு அரசைக் கோரியிருந்தார்.

4. மேற்கண்ட செலவு தொகையினை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

5. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை ஏற்று, சிறப்பு திட்ட செயலாக்கத்துறையின் ஒப்புதல் பெறப்பட்டு, நன்கு ஆராய்ந்து முன்னாள் கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, திருநெல்வேலி மாவட்டக் கூட்டுறவு அச்சகத்திற்கு ரூ.67.00 இலட்சம் மதிப்பில் புதிய அலுவலகம் கட்டுதல் என்பதற்கு பதிலாக மேற்படி அலுவலகக் கட்டடத்தினை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டுவரும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து ரூ.50.00 இலட்சம் செலவில் புனரமைப்பு செய்ய அனுமதித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

முகம்மது நசிமுத்தின்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10.
திருநெல்வேலி மண்டல இணைப்பதிவாளர், திருநெல்வேலி.
(கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை–10 மூலமாக).

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் தனிச்செயலாளர், சென்னை–9.
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
கூடுதல் தலைமைச் செயலாளரின் முதன்மை தனிச் செயலாளர்,
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னை–9.
நிதி (சம்பளம்) துறை, சென்னை–9.
சிறப்பு திட்ட செயலாக்கத்துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/சுத்த நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/12/2021
பிரிவு அலுவலர்.

13.12.21